**பொலன்னறுவை மாநகர சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொலன்னறுவை மாநகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) 219 ஆம் பிரிவினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பொலன்னறுவை மாநகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 யூலை 03 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமான பத்திரத்தில் விநியோகிக்கப்பட்ட வடமத்திய மாகாண மாநகர சபைகளின் நிதி நிர்வாக விதி இலக்கம் 96 மற்றும் 97 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த காசுப்பாய்ச்சல் கூற்று, விரிவான வருமானக் கூற்று | ஏற்றுக்கொள்கின்றோம். சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விதியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

மற்றும் சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று என்பவற்றில் பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் காசுப்பாய்ச்சல் கூற்றில் முன்னைய ஆண்டிற்குரிய ஒப்பீடு செய்யக் கூடிய தகவல்களும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த நானாவித கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 2,005,495 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | சரியான பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளுராட்சி இயலளவு அபிவிருத்தி செயற்திட்டம் (CDLG) இன் மூலம் முன் அலுவலகத்தை அபிவிருத்தி செய்வதற்காக கிடைக்க வேண்டிய ரூபா 500,000 மூலதன மானியக் கணக்கில் செலவு வைக்கப்படாதிருந்ததுடன் அப்பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள், நிலையான சொத்துக்களின் கீழும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் மேலதிகம் 02 இன் E.G 10.1 இன் பிரகாரம் செயற்திட்டங்களில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள அளவின் பிரகாரம் பெறுமதி இனங்காணப்பட வேண்டியிருந்த போதிலும் 49 | ஏற்றுக்கொள்கின்றோம். | கடன்கொடுத்தோர் பெறுமதியாக பூர்த்தி செய்யப்பட்ட சதவீதத்தின் பிரகாரம் பெறுமதி இனங்காணப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டங்களின் மதிப்பீட்டுத் தொகையான ரூபா 188,481,762 கடன்கொடுத்தோராக இனங்காணப்பட்டிருந்தது. எனினும் உடன்படிக்கைப் பெறுமதி மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட சதவீதத்தின் பிரகாரம் இனங்காணப்பட வேண்டிய பெறுமதி ரூபா 109,378,043 ஆனமையால் கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 79,103,719 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் மேலதிகம் 02 இன் E.G 10.1 இன் பிரகாரம் ஒப்பந்தத்தில் உறுதிப்படுத்தப்பட்ட பெறுமதி ஒப்பந்த அடிப்படையில் வருமானமாக இனங்காணப்பட வேண்டியிருந்த போதிலும் மாநகர சபை கடன்பட்டோராக ரூபா 190,895,844 தொகை இனங்காணப்பட்டிருந்தது. உறுதிப்படுத்தப்பட்ட வேலைப் பெறுமதியின் பிரகாரம் இனங்காணப்பட வேண்டிய பெறுமதி ரூபா 152,897,991 ஆனமையால் வேலைக் கடன்பட்டோர் மீதி ரூபா 37,997,853 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | கடன்பட்டோர் பெறுமதியாக உறுதிப்படுத்தப் பட்ட பெறுமதி இனங்காணப்படல் வேண்டும். |
| (உ) | ரூபா 7,781,329 பெறுமதியான நடைபெற்றுக் கொண்டிருக்கும் மூலதன வேலைகள் நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | நியமத்தின் மேலதிகத்தின் பிரகாரம் சீராக்கங்கள் மேற்கொள்ளப் படல் வேண்டும். |
| (ஊ) | பெறுமதி ரூபா 9,660,000 ஆன 03 காணிக் கூறுகள் மீளாய்வாண்டில் நிதிக் கூற்றுக்களில் காணியின் கீழ் காண்பிக்கப்படாமையால் | ஏற்றுக்கொள்கின்றோம். | சரியான பெறுமதியின் பிரகாரம் திருத்தம் செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி அப்பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (எ) | உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் மிகையோ அல்லது பற்றாக்குறையோ உள்ளடக்கப்படாமல் மூலதன செலவின மானியத்தின் கீழ் 2021 சனவரி 01 இல் உள்ளவாறு வைக்கப்பட வேண்டிய ரூபா 1,908,000 மீதி உள்ளடக்கப்படாமை மற்றும் 2021 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 20,236,105 தொகை கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக கூட்டுமொத்தமாக ரூபா 22,148,005 அந்த கூற்றில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். அதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டின் ஆரம்ப நீதிமன்ற தண்டப்பண மீதி குறைத்து காண்பிக்கப்பட்டமையால் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 5,405,714 மிகையாக காண்பிக்கப்பட்ட போதிலும் சரியாக நீதிமன்றத் தண்டப்பண மீதி இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021.12.31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் தொடர்பாக மாகாண திறைசேரியில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது அது ரூபா 3,236,533 ஆக இருந்தமை கூறப்பட்டிருந்த போதும் அப்பெறுமதியை உறுதிப்படுத்திய கடிதமொன்று மாகாண திறைசேரியிலிருந்து கிடைத்திருக்கவில்லை. | சரியான மீதியை இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 12,003,474 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,714,918 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவைக் கடை வாடகை வருமானம் ரூபா 19,305,671 தொகை காணப்பட்டதுடன் அதில் 88 கடைகளுக்குரிய ரூபா 9,796,872 பெறுமதி 02 வருடங்களுக்கும் 04 வருடங்களுக்கும் இடையிலான காலம் முதல் உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைக் கடை வாடகையை அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | கடை வாடகை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பொலன்னறுவை புதிய பொதுச்சந்தை தொகுதியின (PCC) கடைகளை வாடகைக்கு வழங்கும் உடன்படிக்கைப் பத்திரத்தின் பிரகாரம் மீளச் செலுத்தப்படாத வைப்பு பணம் வாடகையாளர்களினால் வாடகைக்கு வழங்குபவருக்கு ஒரே தடவையில் அல்லது 50 சதவீதம் செலுத்தி மிகுதிப் பணம் 2020 திசெம்பர் மாதம் 02 ஆந் திகதியில் அல்லது அதற்கு முன்னர் செலுத்த வேண்டியிருந்தமையும் அவ்வாறு இல்லாதவிடத்து உடன்படிக்கை இரத்துச் செய்யப்படுமென காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 16,338,750 பெறுமதியான வைப்பு பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிலுவையாக காணப்பட்ட போதும் அதற்குரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமை மற்றும் கடைகளில் காணப்பட்ட நிர்மாணங்கள் பலவீனமாக இருந்தமையால் வியாபாரிகளினால் கடைகளை திறப்பதற்கு முடியாதிருந்தது. கடை உரிமையாளர்கள் மற்றும் சபைக்கிடையே நடைபெற்ற கலந்துரையாடலின் போது கடை உரிமையாளர்கள் கடைகளை திறப்பதற்கு இணக்கம் தெரிவிக்காமையின் காரணமாக இந்த சந்தைத் தொகுதியின் வேலை நடவடிக்கைகள் தோல்வியடைந்திருந்தது. அதன் காரணமாக ஒரே தடவையில் (Key money) செலுத்தும் பணமும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் ஊடாக இந்த கட்டிடத்தின் தொழில்நுட்ப கணக்காய்வை மேற்கொண்டு நிர்மாணக் | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கம்பனியுடன் கலந்துரையாடி குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | 2020 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கதுறுவெல பேரூந்து தரிப்பிட நிலைய சந்தைக் கடைகள் மற்றும் வைத்தியசாலைச் சந்தியில் அமைந்துள்ள பிபிதெமு (மலரும்) பொலன்னறுவை கடைகள் இல் ஆரம்ப வைப்பு (Key money) தொகையில் ரூபா 1,307,295 தொகை 2022 ஒக்தோபர் 03 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நிலுவை (Keymoney) முற்பணம் தற்போது நிலுவைக் கடை வாடகையுடன் ஒரு பகுதியாக கடை உரிமையாளர்களினால் செலுத்தப்படுகின்றது என குறிப்பிடுகின்றோம். | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மாநகர சபையினால் ரூபா 34,190,583 செலவில் உக்கும் கழிவுப் பொருட்கள் 3285 தொன் மற்றும் உக்காத கழிவுகள் 1095 தொன் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் உக்கும் கழிவுப்பொருட்களில் மிகவும் வரையறுத்த அளவை பயன்படுத்தி சேதனப் பசளை 58 தொன் மாத்திரம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டிருந்ததுடன் உக்காத கழிவுப்பொருட்களில் மிகவும் வரையறுத்த அளவில் துண்டுகளாக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் எஞ்சிய சகல உக்கும் மற்றும் உக்காத கழிவுகள் மாநகர சபைக்குச் சொந்தமான கல்லேல்ல கழிவுப்பொருள் அகற்றும் நிலத்தில் திறந்த வெளியில் போடப்பட்டதன் காரணமாக அதிக சுற்றாடல் பாதிப்பிற்கு உட்பட்டுக் கொண்டிருந்த போதிலும் முறையான கழிவுப்பொருள் அகற்றும் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | முறையாக உக்காத கழிவுகளை மீள்சுழற்சி செய்யும் வேலைத்திட்டம் தொடர்பில் மாநகர சபையின் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் நகர பொறியியலாளர் திணைக்களத்தின் மூலம் இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக செயற்திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையின் பிரகாரம் தீர்மானங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் தற்போது நாட்டில் காணப்படுகின்ற நிலைமையின் அடிப்படையில் அந்த செயற்திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. அதன் காரணமாக உக்காத கழிவுப்பொருட்களை | உக்காத கழிவுப் பொருட்களை மீள் சுழற்சி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தை தாமதமின்றி ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

உக்காத கழிவுப்பொருட்களை துண்டுகளாக்குதல் மற்றும் உக்கும் கழிவுகள் தொடர்பாக முறையான அறிக்கை பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.

கழிவுகளை அகற்றுப்படுகின்ற நிலையத்தின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக செயற்திட்ட அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு வரையிலும் அது தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது.

மீள்சுழற்சி செய்வதற்கு இன்று வரையிலும் முடியாதிருந்தது.